Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 159

வெள்ளிக்கிழமை
03 மே 2024

சித்திரை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி




# எரிக் சொல்ஹெய்ம் ஒரு கோமாளி: நாட்டாமைவேலை காட்டவேண்டாம்

## நினைவேந்தல் நிகழ்வில் சரவணபவன் காட்டம்



**யாழ்ப்பாணம், மே 3**

**தமிழர்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்த ஒருவர்தான் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம். அவர் ஒரு கோமாளி. அவர் தனது நாட்டாமைத்தனங்களை இங்கு வந்து காட்டக்கூடாது - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ. சரவணபவன் தெரிவித்தார்.**

11

# ஒட்டுக்குழுவால் கொல்லப்பட்ட உதயன் பணியாளர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 3

2006ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி உதயன் பணிமனைக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய ஒட்டுக்குழுவால் உயிரிழந்த உதயன் பணியாளர்கள் இருவருக்கும், சக பணியாளர்களால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

18ஆண்டுகள் கடந்தும் நீதி நிலைநாட்டப்படாத அந்தச் சம்பவத்துக்காக் கண்டனம் தெரிவித்து உதயன் குழுமத்

10

# குருதிக் காயங்களுடன் கணவனின் சடலம்

## மனைவி தவறான முடிவெடுத்து உயிரிழப்பு

வவுனியா, மே 3

நெடுங்கேணி - கீரிசுட்டானில் கணவன் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் மனைவி தவறான முடிவெடுத்தையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவரும் அங்கு உயிரிழந்துள்ளார்.

10

# 'சீ-நோருக்கு' இந்தியா உதவி

கொழும்பு, மே 3

காரைநகரிலுள்ள வட கடல் (சீநோர்) படகுத் தொழிற்சாலை இந்திய உதவியுடன்புனரமைக்கப் படவுள்ளது.

11



# இலங்கையின் இறையாண்மை இந்தியாவுக்கு காட்டிக்கொடுப்பு

## மீண்டும் விமல் கூச்சல்

கொழும்பு, மே 3

இலங்கையின் இறையாண்மையை இந்தியாவுக்கு காட்டிக்கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராகிவருகின்றனர். எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்குரிய ஏற்பாடுகளும் இரகசியமாக இடம்பெறுகின்றன என்று உத்தரலங்கா சபாகயவின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

11



## புங்குடுதீவில்

# எலும்புக்கூட்டுடன் செப்பு நாணயம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 3

புங்குடுதீவு கடற்கரையில் முன்னெடுக்கப்பட்ட எலும்புக்கூடு அகழ்வுப் பணியின்போது பெண்ணொருவரினுடையதாகக் கருதப்படும் எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. எலும்புக்கூட்டுடன் செப்பு

10

# மன்னாரில் சந்தேகநபரின் ரூ.9 கோடி சொத்து முடக்கம்

மன்னார், மே 3

'யுக்திய' தேடுதல் நடவடிக்கையில் மன்னாரில் சந்தேகநபரின் 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் நேற்று முடக்கப்பட்டுள்ளன.

தலைமன்னாரைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபருக்குச் சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்கலாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் 2002 ஆம் ஆண்டு வீட்டுத்திட்டத்தைப் பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் 2019

11

# கால்நடை மருத்துவர்கள் சுகவீன விடுப்பு போராட்டம்

கிளிநொச்சி, மே 3

அரச கால்நடை மருத்துவர்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஆரம்பித்துள்ள இரண்டு நாள் சுகவீன விடுமுறைப் போராட்டம் காரணமாக அரச கால்நடை மருத்துவமனைகள் செயலிழந்துள்ளன. அங்கு சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (அ-ஓ-113)

# பல்கலைக்கழகங்களில் தொடர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 3

அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள்

10

# லிட்ரோ எரிவாயு விலை குறையும்

கொழும்பு, மே 3

எரிவாயுக் கொள்கலன்களின் விலையை இன்று நள்ளிரவு முதல் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு

10

# வழித்தட அனுமதி விற்பனை எதிர்ப்பு வெளியிட்டு போராட்டம்

யாழ்ப்பாணம், மே 3

வழித்தட அனுமதிகள் விற்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சிவராம், ரஜிவர்மனுக்கு வடமராட்சியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 3

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் செல்வராசா ரஜிவர்மனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் அண்மையில் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி ஊடக இல்லத்தின் ஊடக உறுப்பினர் முருகப்பெருமான் மதிவாணன் தலைமையில் ஊடக இல்லத்தில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொதுச்சுடரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் செல்வராசா ரஜிவர்மனின் தாயார் ஏற்றிவைக்க, தராகி சிவராம் அவர்களின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி ரகுராம் அணிவித்தார். தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-35)

# கசிப்பு அருந்திய மூவர் பலி

கொழும்பு, மே 3

களுத்துறை - கரன்னாகொட, வரக்காகொட பகுதியில் சட்டவிரோத மதுபானமான கசிப்பை அருந்தியதாகக் கூறப்படும் மூவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளனர் என்று வரக்காகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-555)

# காங்கேசன் – நாகப்பட்டினம் கப்பல்சேவை மீள ஆரம்பம்!

கொழும்பு, மே 3

இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையேயான கப்பல் சேவை இம்மாதம் 13ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

4 தசாப்தங்களின் பின்னர் இந்தியா - இலங்கை இடையேயான பயணிகள் கப்பல் சேவை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த சில தினங்களிலேயே சீரற்ற காலநிலையால் சேவைகள் ஒத்திவைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே தற்போது மீளவும் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ச-இ)

# உ/த பெறுபேறு இம்மாதம்

கொழும்பு, மே 3

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதம் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இலங்கைக்கு வருவதற்கு முயன்ற தம்பதி உட்பட எட்டுப் பேர் கைது

சென்னை, மே 3

தனுஷ்கோடி வழியாக படகில் சட்டவிரோதமாக இலங்கைக்கு வருவதற்கு முயன்ற தம்பதியினரும், அவர்களுக்கு உதவிய ஆறு பேருமாக எட்டுப் பேர் தமிழகத்தில் கடந்த 30ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

2017ஆம் ஆண்டு விமானம் மூலம் இந்தியாவில் தஞ்சமடைந்த வவுனியாவை பூர்வீகமாகக் கொண்ட தம்பதியரே இவ்வாறு இலங்கைக்கு சட்டவிரோதமாகப் பயணிக்க முற்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த ஆறு பேரில், நால்வருக்கு எதிராக இலங்கைக்கு சட்டவிரோதமாக ஆள்களை அனுப்பிவைத்த வழக்கு ஏற்கனவே நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-56)

# கழிவுகளை அகற்றுவதற்காக பல வர்ணங்களில் கூடைகள்!

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்றவகையில் நகரிலுள்ள வள நிலையத்தில் குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டுள்ளன.

பச்சை உக்கக்கூடிய கழிவுகள், செம்மஞ்சள்-பிளாஸ்ரிக் கழிவுகள், நீலம் - கடதாசிக் கழிவுகள், சிவப்பு - கண்ணாடிக் கழிவுகள், கபிலம் - உலோகக் கழிவுகள், சாம்பல் - இலத்திரனியல் கழிவுகள், மஞ்சள் - தொற்றுக்கழிவுகள் என்றவாறு குறித்த நிறக் குப்பைத்தொட்டிகளில் கழிவுகளை அப்புறப்படுத்த முடியும். நகரசபை வரியிறுப்பாளர்கள் இந்தத் தொட்டிகளில் குப்பைகளையிட்டு சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ம-9)


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி - 2024 (கட்டம் V)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.05.03 ஆம் திகதியில் இருந்து 2024.05.16 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.05.03 ஆம் திகதியிலிருந்து 2024.05.16 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணிக்கும், 2024.05.17 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **3000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு . வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.05.17 ஆம் திகதி பி.ப 2:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.05.10 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/PV/2024/22 | புன்னைக்குளம் வீதி புனரமைப்பு – ஆவரங்கால் கிழக்கு | 5.25 | 90 நாட்கள் | C7& C6 ( வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 53,000.00 | 30.08.2024 |
| NP/14/41(13)/4/Council/ PV /2024/23 | பிராமணவோடை வீதி புனரமைப்பு – கோப்பாய் வடக்கு | 9.32 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 94,000.00 | 30.08.2024 |
| NP/14/41(13)/4/Council/ PV /2024/24 | தலைமை அலுவலகத்திற்கான தரை வடிவமைப்பு வேலை – புத்தூர் | 1.07 | 45 நாட்கள் | C9 & C8 (கட்டட நிர்மாணம்) | 49 நாட்கள் | 11,000.00 | 02.08.2024 |
| NP/14/41(13)/4/Council/ Maintenance / PV /2024/25 | முருகன் வீதி திருத்தம் (மீள்தாரிடல்) – உரும்பிராய் தெற்கு | 1.75 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி நிர்மாணம்) | 49 நாட்கள் | 18,000.00 | 02.08.2024 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.05.03

(CR 42339) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிரிழையில் வென்றது சன்ரைஸஸ் ஹைதராபாத்

## ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியுடனான ஆட்டத்தில் ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றது சன்ரைஸஸ் அணி.

ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று சன்ரைஸஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்களைப்பெற்றது. நிதிஸ்குமார் ரெட்டி 46 பந்துகளில் 72 ஓட்டங்களையும், க்ளாசன் 19 பந்துகளில் 42 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர். ஹெட் 44 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ராஜஸ்தான் அணி வீரர் சகால் 4 பந்துப் பரிமாற்றங்களில் 62 ஓட்டங்களை வாரி வழங்கி ஐ.பி.எல். வரலாற்றில் அதிகூடிய ஓட்டங்களை விட்டுக்கொடுத்த வீரராகப் பதிவானார். பதிலளித்து ஆடிய ராஜஸ்தான் அணிக்கு முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி கொடுத்தார் புவனேஸ்வகுமார். ஜோஸ் பட்லர், சஞ்சு சாம்சன் இருவரும் ஓட்டம்பெறாமலே ஆட்டமிழந்தனர். ஜெய்ஸ்வால் மற்றும் ரியன் பராக் இருவரும் வெற்றிப்பாதைக்கு அணியை அழைத்துச் சென்றாலும் ஜெய்ஸ்வால் 40 பந்துகளில் 67 ஓட்டங்களுடனும், பராக் 49 பந்துகளில் 77 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஆட்டம் மெல்ல சன்ரைஸஸ் பக்கம் சரிந்தது. இறுதிப்பந்தில் வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் புவனேஸ்வகுமாரின் பந்து வீச்சில் இலக்கு சரிக்கப்பட 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது ராஜஸ்தான். (ஒ-5)

## சு.க.வின் வேட்பாளரை தனித்துத் தீர்மானிக்க முடியாது

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக தீர்மானிக்க முடியாது என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாஸ களமிறங்குவார் என அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறு தயாசிறி தெரிவித்தார். (ம)

கூலரும் 'காரும்'

## மோதி விபத்து

ஒருவர் காயம்




வவுனியா, மே 3 நெடுங்கேணி சந்தியில் குளிரூட்டப்பட்ட மீன்கள் ஏற்றும் வாகனமும் காரும் நேற்றுக்காலை மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காரின் சாரதி காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற நெடுங்கேணி போக்குவரத்து பிரிவு பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ஒ-18)

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 12 . 1936



மறைவு
02 . 05 . 2024

### திருமதி இராஜலிங்கம் கனகம்மா

யாழ்ப்பாணம் பிரம்படி கொக்குவிலை பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜலிங்கம் கனகம்மா அவர்கள் நேற்று (02.05.2024) வியாழக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - அன்னபூரணம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் இராஜலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சரஸ்வதி, ராஜரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சிதாதேவி, சறோஜாதேவி, வசந்தாதேவி (லண்டன்), சாந்தினிதேவி, சிவராஜன் (சுவிஸ்), ரஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் மரியசீலன், பவானந்தன், கனகரெட்னம், சிவராஜமனோகரன், தாரணி, சிவகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன் - ஷாலினி (கனடா), ரஜீவன் - லக்கியா (கனடா), சாங்கர் - பவித்திரா, விதுசன் (டுபாய்), அனோஜன், அஜந், ஆர்த்திக், திலக்ஷி, திலக்ஷன், அபிஷேக், சௌமிக்கா, லதுசன், ஹரிஷன், கிஷோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரத்யா, ஆதிரா, அதிதி, ருத்விகா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00393) S-1

## தினம் தெரியுமோ?

மாமியார் உடைச்சால் மண்குடம், மருமகள் உடைச்சால் பொன்குடம் எண்டுவினம். எல்லாக் காரியங்களுக்கும் அதை ஆர் செய்யினம் எண்டதை வைச்சுத்தான் இப்ப நியாயம் சொல்லுகினம். தமிழர்கள் ஏதும் சின்னதா ஒண்டு செய்தாலும் அதை பூந்து விசாரிச்சு, புலிச்சாயம் பூசி இனிமேல் அப்பிடியொரு எண்ணமே வராத அளவுக்கு குடைச்சல் குடுக்கிற இந்த நாட்டில, மேலதிகாரிமாரின்ர உத்தரவெல்லாத்தையும் குப்பைத்தொட்டிக்குள்ள எறிஞ்சுபோட்டு, நாச்சிக்குடாப் பள்ளிக்கூட அதிபர் செய்யிற சட்டவிரோதமான வேலைக்கு ஒருத்தரும் மூச்சும் காட்டேலாமல் இருக்கினம்.

எங்கட பள்ளிக்கூடப் பிள்ளையள் கார்த்திகைப் பூமாதிரியோ, வெடுக்குநாறிமலை மாதிரியோ விளையாட்டுப்போட்டிக்கு 'டெக்கிரேசன்' செய்தால், அதை பூதக் கண்ணாடியால பாத்திட்டு சூமில மீட்டிங் போட்டு, 'உப்பிடியெல்லாம் இனிச் செய்யக்கூடாது' எண்டு ஓர்டர் போடத் தெரிஞ்ச கல்வித்திணைக்களக்காரரும், வீடு வீடாப்போய் விசாரிச்சு திரிஞ்ச பொலிஸ்காரரும் இப்ப தலையை மண்ணுக்க தாட்டுப்போட்டு, ஒண்டுமே தெரியாதமாதிரி நடிக்கிறதைப் பாக்க அழுகிறதா, சிரிக்கிறதா? எண்டு தெரியேலை.

ஒரு பள்ளிக்கூடத்தின்ர பேரை மாத்திற தொண்டும் உலகமகா குற்றமில்லைத்தான். ஆனால் அதுக்கெண்டு சிலமுறையள் இருக்கு. அதின்படிதான் மாத்தவேணும். அதைவிட்டிட்டு, தாங்கள் நினைச்சபடி ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களின்ர பேரை மாத்த வெளிக்கிட்டால் என்ன நடக்குமெண்டு யோசிச்சுப் பாத்தியளோ. ஓ.எல். எக்ஸாமுக்கு அனுமதி அட்டை குடுக்கேக்கதான் ஏதோ ஆர்வக்கோளாறில 'நாச்சிக்குடா முஸ்லிம் கலவன் பாடசாலை' எண்டு பிராங்க் அடிச்சுப்போட்டார் எண்டு எல்லாரும் நினைச்சவை. ஆனால் இப்ப மாகாணக் கல்விப் பணிப்பாளரே 'நாச்சிக்குடா தமிழ்க் கலவன் பாடசாலை எண்டதுதான் பேர். அதை மாத்தி எழுதக்கூடாது' எண்டு சொன்ன பிறகும், விளையாட்டுப்போட்டி அழைப்பிதழையும், சான்றிதழையும்கூட முஸ்லிம் பாடசாலை எண்டு மாத்தி அச்சடிச்சிருக்கிறார் எண்டால் என்ன அர்த்தம்? ஒண்டு, உந்த மேலதிகாரிமார் குரைப்பினமே தவிர கடிக்கமாட்டினம் எண்ட நம்பிக்கை. மற்றது . அந்த அதிபருக்குப் பின்னால ஆரோ ஒரு பெரும் முஸ்லிம் அரசியல் புள்ளி ஒண்டு நிக்க வேணும். இந்த ரண்டும் இல்லாமல் ஒரு சாதாரண செக்கண்டறிப் பள்ளிக்கூட அதிபர் இந்தளவுக்கு ஆடமாட்டார். எங்கட அதிகாரிமாருக்கும் ஆரு மொரு அரசியல்வாதியின்ர பேரைச்சொன்னாலே காணும். பெட்டிப்பாம்பா சுருண்டுபோய்க் கிடப்பினம், ஆரும் அப்பாவியளிட்ட மட்டும்தான் உந்த அதிகாரி மாரின்ர வீரமும், ரூல்ஸும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 02 . 1943



மறைவு 29 . 04 . 2024

## இராசதுரை புனிதவதி

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை புனிதவதி கடந்த 29-04-2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னட்டி - குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், தாவடி நெல்லோருபாதி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ஐயாத்துரை இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும். கமலேஷ்வரி, அழகரட்ணம், லீலாதேவி, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும். அன்னம்மா, சரஸ்வதி, ரத்தினம், பொன்னாபரணம் (சின்னக்கிளி) ஆகியோரின் மைத்துனியும். ரஜனி, ரஞ்சினி, றஜித்தா, காலஞ்சென்ற றஜிந்திரன், சுதா, மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சுபாஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும். நவரட்ணம், யோகநாதன், யோகசிங்கி, மோகனப்பிரியா, கேசவராஜன், தனுஷன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும். பிரணவன், பகீரவன், டினோத், நிலானி, ஆகாஷ், டிவ்யா, சங்கீதா, சண்யுகா, அட்சயா, அஸ்வின், அஸ்வினா, நந்தனா, மகரந்தன், மகிழன், மகதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தொடர்புகளுக்கு:

மகேஸ்வரன் - மகன்
Mobile: +393381098751
ஜெகதீஸ்வரன் - மகன்
Mobile: +94778998156
ரஜனி மகள்
Mobile : +94775684058
சுதா - மகள்
Mobile : +4915753565063

றஜித்தா மகள்
Mobile: +31648218596
சுபா-மகள்
Mobile: +41764151772
ரஞ்சினி - மகள்
Mobile: +31633726728

தகவல்:
குடும்பத்தினர்.

((cs.54901) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 12 . 1936



மறைவு 30 . 04 . 2024

## சாவித்திரி புண்ணியமூர்த்தி

அளவெட்டி கூத்தன்சீமாவைச் சேர்ந்த சாவித்திரி புண்ணியமூர்த்தி அவர்கள் 30.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சட்டத்தரணி திரு.செல்லையா புண்ணியமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், அன்பிற்கரசி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ஜெயவீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கெங்காதரன் (France), லிங்காதரன் (Norway), புவிதரன் (Norway), நிரஞ்சனா (Sri Lanka), Dr. மேகலா (Sri Lanka), ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாலினி (France), துளசிமணி (Norway), ரகுணா (Norway), சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மகிபன், ருஷிபன், அஷ்லி (France), டானியா, ஆலியா, அன்யா (Norway), ரகுலன், விதுலன் (Norway), ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், கானவியின் (Sri Lanka) அன்பு அம்மம்மாவும், Ethan, Lena, Ines, Amanda, Herman ஆகியோரின் அன்பு பூட்டியும், Benjamin, Tamara, கோபிராஜ், HenrikWorren ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.05.2024) காலை 8.30 மணிமுதல் இரவு 10.00 மணி வரை Jayaratne Parlor Borelly (Elvitigala Mawatha, Colombo - 8) என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.05.2024) 8.30 am - 10.30 am வரை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 am - 12.00 pm மணிக்கு கிருலப்பனை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கெங்காதரன் : +33679972555
மேகலா : 0764485957

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/ 54906) J-1

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 04 . 1952



மறைவு 02 . 05 . 2024

## குணராசா புஸ்பராணி (புஸ்பா)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கன்னார வீதி, நல்லூர், கலைமணி வீதி, கட்டபிராய், இருபாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குணராசா புஸ்பராணி நேற்று (02.05.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராசையா பத்தர் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குணராசாவின் அன்பு மனைவியும், இராஜிகா (ஆசிரியர் - யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), றதீபா, றதீபன் (உரிமையாளர் - வேல்முருகன் நகைமாடம் - கல்வியங்காடு), மயூரன் (முகாமையாளர் Softlogic - யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்), தினேஷ், கைலா, பிரியதர்ஷினி (முகாமைத்துவ உதவியாளர் நகரசபை - பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேவராணி (சாந்தா)யின் அன்புச் சகோதரியும், அபிராம், அஸ்வின், ஹரிஷ்மன், ஷாருஜீன், கிஷான், ஹருண், அக்ஷயா, அத்மிகா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கலைமணி வீதி,
கட்டப்பிராய்.

(CS54894) N-1

தகவல்:
குடும்பத்தினர்.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 10 . 1941



மறைவு 15 . 04 . 2023

## அமரர் சின்னக்குட்டி கிட்டுனு
(செல்லக்கண்டு)

### திதி: ஊர்ம தசமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்...

[illegible] வடக்கு,
[illegible], சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CS/392) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வரலாற்றுத் தவறுகளுக்கு வழிவகை செய்யாதிருப்போம்


காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் முன்பெல்லாம் பல்லாயிரம் பேர் திரண்டிருந்த நிலையில், தற்போது அந்தப் போராட்டங்கள் நூறு பேருடனும் அதற்குக் குறைவான எண்ணிக்கையானோருடனும் சுருங்கிப்போய்விட்டது. எனவே, தமிழ்மக்கள் எங்களை மறந்துவிடக்கூடாது. தொடர்ந்தும் பல ஆயிரங்களில் அணிதிரண்டு எங்களின் உறவுகளை எங்களுக்கு மீட்டுத்தரவேண்டும் என்று கிளிநொச்சியில் தொடர் போராட்டங்களை நடத்திவரும் உறவுகள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஐம்பதல்ல, நூறல்ல சுமார் இரண்டாயிரத்து ஐநூறு நாள்களாக தமிழர் தாயகம் இந்தப் போராட்டத்தை எத்தனையோ தடங்கல்கள் 'அச்சுறுத்தல்கள்' இடையூறுகளைத் தாண்டி முன்னெடுத்த போதிலும், நீதியென்பது இன்னமும் எட்டாக்கனி நிலைதான். போர் முடிவுக்குவந்து ஒன்றரைத் தசாப்தம் கடந்துவிட்டபோதிலும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீடு, இறப்புச் சான்றிதழ்கள் என்பனதான் சிறீலங்கா அரசாங்கம் முன்வைத்த உச்சபட்சத் தீர்வுகளாக உள்ளன. இவற்றைத்தவிர வேறெந்த நகர்வையும் சிறீலங்கா அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் கிஞ்சித்தும் முன்நகர்த்தவில்லை. அதற்குரிய ஆத்மார்த்தமான விருப்பமும் கொழும்புக்கு இல்லை.

காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் இரண்டாயிரத்து ஐநூறு நாள்களாக விடுக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளும் இலங்கையின் நீதிக் கட்டமைப்பை அசைக்கவில்லை. அரசின் இரும்பு இதயத்தை இளகச்செய்யவில்லை. ஆதலால் தற்போது எம்முன்னுள்ள ஒரேதெரிவு 'போராட்டத்தைத் தீவிரப்படுத்தல்'தான். இப்படியொரு நிலையில்தான், தங்களை மறந்துவிடக்கூடாது என்றும், தமக்காக அணிதிரளுமாறும் உறவுகளைத் தொலைத்துவிட்டு உணர்வற்றுத் திரியும் எம்மவர்கள் 'மன்றாட்டமாக' வலியுறுத்தியிருக்கின்றனர்.

கொழும்புக்கு அவகாசங்களை மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை, தற்போது அடுத்தகட்ட செல்நெறியைத் தீர்மானிக்கும் காலம் விரைவில் வாய்க்கலாம் என்றே கருதப்படுகின்றது. வரவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படும் பாங்கு, போரில் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கான நீதிக்கட்டமைப்பு, நிலைமாறு கால நீதி, பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனது பிடியை இறுக்கும் சாத்தியங்களும், அதற்குரிய வாய்ப்புகளும் இருக்கவே செய்கின்றன. இப்படியொரு பின்னணியில் காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்தின் கனதியை அதன் தாக்கத்தை தாயகத்தில் மட்டுமல்லாது சர்வதேசத்தை நோக்கி நகர்த்த வேண்டியது தமிழர்களாகிய எமது காலக்கடமையாகும். ஆதலால், காணாமலாக்கப்பட்டோருக்காக உயர்த்தப்பட வேண்டிய எமது குரல்கள் இரந்தோ, மன்றாட்டமாகவோ கேட்டுப் பெறப்படவேண்டியன அல்ல. இந்தப் பொதுப்புரிதலை நாம் எம்முள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

காணாமலாக்கப்பட்டவர்கள் மாற்றான் வீட்டுப் பிள்ளைகள் அல்லர். எம் பிள்ளைகள், எம் உறவுகள், எம் உணர்வுகள். காலக்கடமைகளை நிறைவேற்றவிடாத பட்சத்தில், அதை 'வரலாற்றுத் தவறு' என்பர். அவ்வளவு இலகுவில் திருத்தியெழுத இயலாத தவறுகள்தான் வரலாற்றுத் தவறுகளாகின்றன. தமிழர் தாயகம் அந்தப் பாரதூரத்தை இழைக்காதிருக்கட்டும்.





சிறுவர்களுக்கு ஏற்படுத்தப்படும்

## உள ரீதியான பாதிப்பும் தண்டனைக்குரிய குற்றம்

### தண்டனைச் சட்டத்தில் திருத்தம்

**கொழும்பு, மே 3**

**உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ சிறுவர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தண்டனையையும், சட்டத்தின்படி குற்றமாகக் கருதும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.**

அரசாங்கத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் வைத்தே, அமைச்சரவையின் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இந்த அறிவிப்பை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில், அனைத்துத் துறைகளிலும் உடல்ரீதியான தண்டனை விதிப்பதைத் தடை செய்வதற்காக, தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றார். (ச-இ)

## வடக்குப் பகுதிகளில் அமைதி எங்குள்ளது?

### அம்பிகா சற்குணநாதன் கேள்வி

யாழ்ப்பாணம், மே 3

இலங்கையின் வடபகுதி அமைதியாக உள்ளது. இது சிறப்பான விடயமென இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளமை உண்மையற்றது என மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

வடபகுதி இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. ஊடகங்கள் சிவில் சமூகத்தினர் போன்றவர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். இது அமைதிக்குமாறான நிலை என்பதுடன் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்துகின்றது- என்றும் அம்பிகா தெரிவித்துள்ளார். (ச-இ)

## ரூ. 1,700 ஊதியம்!

### வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 3

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் ஆயிரத்து 700 ரூபாவாக அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

## பணி நீக்கம்!

பிரிட்டனில் இலங்கையர் ஒருவரைக் கடுமையாக தாக்கிய குற்றத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பிரிட்டன்பொலிஸ்அதிகாரியை 12 வாரங்களுக்கு பணி இடைநிறுத்தியுள்ளது அந்த நாட்டு அரசாங்கம். அத்துடன் பாதிக்கப்பட்ட நபருக்கு ஆயிரத்து 500 பவுண் நட்டஈடு வழங்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-6)

## தேயிலை ஏற்றுமதி; இலங்கை நான்காமிடம்

கொழும்பு, மே 3

தேயிலை ஏற்றுமதியில் இலங்கை தற்போது நான்காமிடத்திலுள்ளது. சீனா, இந்தியா, கென்யா ஆகிய நாடுகள் இலங்கையை விடவும் முன்னணியில் உள்ளன.

சீனாவின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 2.24 பில்லியன் டொலராகவும், இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 757 மில்லியன் டொலராகவும் கென்யாவின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 734 மில்லியன் டொலராகவும், இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் 659 மில்லியன் டொலராகவும் அமைந்துள்ளது. (ம-6)

**நாளை**

04.05.2024

**சனிக்கிழமை**

**சித்திரை - 21**

சுபநேரம் : 02.56 - 04.26

ராகுகாலம் : 08.56 - 10.26

**ஏகாதசி விரதம்**

**நாளொரு நல்வார்த்தை**

**உண்மையும், நேர்மையும்**
**உள்ளவனாக வாழ்ந்தால்**
**அஞ்சா நெஞ்சம் கொண்டவனாக**
**இருக்கலாம்.**

**-சுபாஷ் சந்திரபோஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசின் எதிர்காலத்தை மக்களிடம் ஒப்படைக்கிறேன்!



## மே தின உரையில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 3**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், அதன் எதிர்காலத் தலைமைத்துவத்தையும் மக்கள் மன்றத்தின் முன் கையளித்து, புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கிறேன் என்று கிளிநொச்சியில் பேரெழுச்சியுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த்தேசிய மே நாள் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் இயக்கத்தை முடக்கி, உட்கட்சி ஜனநாயகத்தை சவாலுக்கு உட்படுத்தி, கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் அது தொடர்பில் கருத்துரைக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது.

கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு தலைமைப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதால் என்னை இன்று நீதிமன்றில் நிறுத்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கடந்தும் கட்சியைத் தளம்பலற்றுக் கொண்டுசெல்ல நான் மேற்கொண்ட விட்டுக்கொடுப்புகள், எதிர்கொண்ட சமரசப் பேச்சுகள், அதுசார்ந்து நான் முன்னெடுத்த முயற்சிகள் என எல்லாவற்றையும் மக்களுக்கு வெளிப்படுத்த முனைகிறேன். அதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தையும் கட்சித் தலைமையின் எதிர்காலத்தையும் முன்னிறுத்தி. எனது புரட்சிகர அரசியல் பயணத்தை ஆரம்பிக்கிறேன் - என்றார். (ச-26)

# இந்தியா – சீனா இடையில் மத்தியஸ்தத்துக்குத் தயார்

## சஜித் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 3

இந்தியாவுக்கும் - சீனாவுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதற்கு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டபோது சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே, இந்தியா - சீனா இடையில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 1962ஆம் ஆண்டு இந்திய - சீன யுத்தம் நடைபெற்றபோது அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் அணிசேரா நாடுகளின் கூட்டத்தைக்கூட்டி இந்திய சீன யுத்தத்தை நிறுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் இதன்போது நினைவுகூர்ந்து பாராட்டியுள்ளார். (ம-6)

# 28,222 மெற்றிக்தொன் நெல் பெரும்போகத்தில் அறுவடை

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போகப் பயிர்ச்செய்கையில் 28 ஆயிரத்து 222 மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெய்வ நாயகி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுக ளிலும் காணப்படுகின்ற கமநல சேவைகள் பிரிவுகளில் 11 ஆயிரத்து 288 ஹெக்டயரில் நெற்பயிர்ச்செய்கை இடம்பெற்றது. குறித்த பயிர்ச்செய்கையில் இருந்து 28 ஆயிரத்து 222 மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-125)



தலைமன்னார் ஊர்மனைப் பகுதியில் அமைந்துள்ள சூசையப்பர் ஆலயப் பெருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெகுகோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சூசையப்பர் ஒரு தச்சுத் தொழிலாளி. எனவே மே மாதம் முதலாம் திகதியான தொழிலாளர் தினத்தையே சூசையப்பருக்கான திருநாள் தினமாக திருச்சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-56)



யாழ்ப்பாணத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேதினப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (ச-66)

**கேள்விஅறிவித்தல**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,நெளுக்குளம்**
**மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2024**

1. தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு. சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(iii)ம் இலக்க 2021.02.18 ம் திகதிய பொதுநிதிசுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை வடமாகாணத்தில் மேற்கொண்டிருத்தல் வேண்டும்

4. தேவையான தகமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம் வவுனியா (தொலைபேசி: 0242225737. தொலைநகல் - 0242050067. மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2024.05.03 திகதியிலிருந்து 2024.05.16 வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை. நெளுக்குளம் எனும் அலுவலகத்தில் 2024.05.03 ஆம் திகதியிலிருந்து 2024.05.16 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500/ (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை. நேரிய குளம் வீதி. நெளுக்குளம். வவுனியா எனும் முகவரிக்கு 2024.05.17 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்து ஏழு நாட்கள் -2024.08.02) வரையும் செல்லுபடியாகும்.

9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/VN/VSTPS/2024/01 | Construction of Mannar road 8th lane | 9.04 | 98 நாட்கள் | C7 and C6 highway | 91,000.00 | 2024.08.30 |

கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2024.05.10 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நெளுக்குளத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம், வவுனியா**
**2024.05.03**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈக்களுக்கு உடன் திட்டமில்லை!

### கைவிரிக்கிறது தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை



**யாழ்ப்பாணம், மே 3**

**யாழ். மாவட்டத்தில் அதிகரித்துச் செல்லும் வெள்ளை ஈக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சரியான பொறிமுறை கைவசம் இல்லை. குறிப்பாக நோய்த்தொற்றை உடனடியாகக் கட்டுப்படுத்துவது தொடர்பில் எந்தத் திட்டங்களும், உத்தரவாதங்களும் இல்லை என தென்னை பயிர்ச்செய்கை சபையினர் தெரிவித்துள்ளனர்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பில் ஆராயப் பட்டபோதே தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்துள்ளதுதான். வீரியம் குறைந்த தென்னையைவிட வீரியமான தென்னையையே அதிகம் தாக்குகின்றன. இதனால் வீரியமான தென்னை மரங்கள் செயலிழந்து போகின்றன. செவ்வண்டு, கருவண்டுத் தாக்கத்தை விட இது அதிகமாக உள்ளது. மாவட்டச் செயலரின் ஆலோசனைக்கு அமைவாக இரசாயன தாக்கமற்ற முறைகளிலேயே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். உயிரியல் முறை கட்டுப்பாட்டின் அடிப்படையில் வன்னியில் கட்டுப்படுத்தமுடியும் என விவசா யத் திணைக்களத்தினர் செயற் பாடுகளை முன்னெடுத்துள்ள னர். ஆனால் எமக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தப்படவில்லை. தற்போதுள்ள நிலைமையில், வீடு வீடாக விசிறல் மூலம் கட்டுப்படுத்தலை மேற்கொள்ளாது கிராமம் கிராமமாகப் பரவலைத் தடுப்பதற்கு விசிறலை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

இதனைத் தனியே செய்யாது அனைவரும் இணைந்து முன்னெடுக்கவேண்டும். இருந்தாலும் உடனடிப் பொறிமுறையை எம்மால் சொல்ல முடியாது- என்றனர். (ஒ-125)

## குருபூசை நிகழ்வு

கோண்டாவில், மே 3

சைவசமய குரவர்களில் மூத்தவரான திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு, கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

## வெண்பாமாலை நூல் வெளியீடு

வயலூரான் சுதாகரனின் வெண்பாமாலை நூல் வெளியீட்டு நிகழ்வு ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன் தலைமையில் கொடிகாமத்தில் அண்மையில் இடம்பெற்றது. நூலினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பளைப் பிரதேச செயலர் ஜெயசீலன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர். நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கிருஸ்ணகுமார், வரவேற்புரையை ஆசிரியர் சி.சிவகாந்தன் ஆகியோர் வழங்கினர். (ச-131)




ஸ்தாபிதம் 1945.05.31

பதிவு இல HA/S/JA/419

**அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்**

**வருடாந்த வெளிமடை உற்சவம் – 2024**

அம்பாள் அடியார்களே!

நிகழும் குரோதி வருடம் சித்திரைத்திங்கள் 27ஆம் நாள் (10.05.2024) வெள்ளிக்கிழமை மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

**விளக்கு வைப்பு**

03.05.2024 வெள்ளிக்கிழமை காலை பூசையுடன் நடைபெறும்.

**மடைப்பண்டம் எடுத்தல்**

10.05.2024 வெள்ளிக்கிழமை பி.ப 5.00 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும்.

**வெளிமடைப்பூசை**

11.05.2024 சனிக்கிழமை காலைப்பூசையுடன் நடைபெறும்.

**8ம் மடை**

17.05.2024 வெள்ளிக்கிழமை மாலைப்பூசையுடன் நடைபெறும்.

காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 10.05.2024 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மேற்கொள்ளலாம்.

மு.குறிப்பு : கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தரும பரிபாலனசபை


## இந்தியப் பேராசிரியரின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 3

அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கலையியல்: கிழக்கும் மேற்கும் எனும் தலைப்பில் இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் அ.இராமசாமியுடனான சந்திப்பும் கதையாடலும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கந்தர்மடம் பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-66)

## பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார் .

24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு உரைநடை, பி.ப. 2 மணிக்கு வரலாறு, 25ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு இலக்கியம், பி.ப. 2 மணிக்கு இலக்கணம், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு சாத்திரம் ஆகிய பாடங்கள் இடம்பெறவுள்ளன.

பரீட்சைகள் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 0779773538 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 3

யாழ். பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக க.நாகஜெயகுமார், இணைச்செயலாளர்களாக இ.மதிகரன், சி.ஆனந்தராசா, பொருளாராக மா.குணேசேகரம், உபதலைவராக க.தருமராசா, பத்திராதிபராக சி.முருகையா மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக க.வரதவேல், க.கனகராசா, ச.குகன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீ கதிரேசன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாக

வுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச)


**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில்**

**வருடாந்த வெளிமடை உற்சவம் - 10.05.2024**

**தற்காலிக கடை வழங்குதல் பற்றிய அறிவித்தல்**

கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கடை வைக்க விரும்புவோர் 08.05.2024 புதன்கிழமை காலை 10 மணியளவில் தும்பளை நெ.ப.அ.கோ சபை காரியாலயத்திற்கு சமுகமளிக்கவும். கடை வழங்குதல் 10.00 மணியில் இருந்து 12.00 மணி வரை நடைபெறும்.

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில், தரும பரிபாலன சபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம்!



யாழ்ப்பாணம், மே 3

சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமைப் பூங்காவில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு.சந்திரகுமார், கூட்டுறவு அமைப்புகள், கடற்றொழில் அமைப்பு கள், ஆசிரிய தொழிற் சங்கம், விவசாய அமைப்புகள், பெண்கள் சார் அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம)

# 'உமா ஓயா' திட்டத்தால் பாதிப்பு எதுவுமில்லை!

## மின்சக்தி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தால் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்ட பின் மண்சரிவுகளோ அல்லது வேறு பிரச்சினைக்குரிய சூழ்நிலைகளோ இதுவரை பதிவாகவில்லை. உமா ஓயா பிரதேசத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் விரிசல்கள் மற்றும் நீர்க் கசிவுகள் தொடர்பில் ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியில் தீர்வுகளை மேற்கொள்வோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**
**வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள் - 2024.07.01 தொடக்கம் 2025.06.30 வரை**

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்திய சாலைகளுக்கு உலர் உணவு. சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்விஉத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2024/01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 25,000.00 |
| 02. | D/JF/2024/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |
| 03. | D/JF/2024/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 60,000.00 |
| 04. | D/JF/2024/04 | | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | 260,000.00 |
| 05 | D/JF/2024/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 45.000.00 |
| 06 | D/JF/2024/06 | | ஆதாரவைத்தியசாலை, ஊர்காவற்துறை | 150,000.00 |
| 07 | D/JF/2024/07 | | பிரதேசவைத்தியசாலை, நெடுந்தீவு | 20,000.00 |
| 07 | D/JF/2024/08 | | பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி | 40.000.00 |
| 08 | D/JF/2024/09 | | பிரதேசவைத்தியசாலை, கோப்பாய் | 70,000.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - இ. அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 6253,021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைபரிசீலிக்கமுடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 06.05.2024 ஆம் திகதி முதல் 22.05.2024 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 27.05.2024 அன்று காலை10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 15 ஆம் திகதி மே மாதம் 2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
9. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com**


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 31.08.1950 மறைவு 30.04.2024

எமது மன்ற உறுப்பினர்
**மயூரி** அவர்களின் பாசமிகு தந்தையார்
**வைத்திலிங்கம் சுந்தரலிங்கம்**
அவர்கள் 30.04.2024 அன்று இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
விஸ்வகர்மா சிற்பக் கலைக்கூடம்
பரம்பரை பஞ்சகம்மாளர் / குலத்தொழில்

## கலசம்

- இராஜ கோபுர கலசங்கள்
- விமான கலசங்கள்
- வசந்த மண்டப கலசங்கள்
- பரிவார கலசங்கள்

18 கேஜ் தொடக்கம் 22 கேஜ்வரை
முறையாக செய்து தரப்படும்,
6 இஞ்சிமுதல் 60 இஞ்சிவரை



தொடர்பு:
விஸ்வஸ்ரீ தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி
இல.97/2, சென். ஜேம்ஸ் வீதி,
கொழும்பு - 15
077 900 6584
vkscentre@gmil.com

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 07 . 1947
உதிர்வு 21 . 04 . 1998



**அமரர் கதிரவேலு கந்தையா**
**(இரத்தினம் மெக்கானிக்)**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இருபத்தாறு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்..

அச்சுவேலி.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
(CS/54905) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான திறப்புவிழா

SJ

சத்தியா ஜீவல்லர்ஸ்

இல.136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

43 வருடங்களாக வடமாகாண மக்களின் நன் மதிப்பை பெற்ற ஒரே ஒரு ஸ்தாபனம் சிறி நதியா நகைமாளிகையின் மற்றுமோர் உதயமாக இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை காலை 6.00 - 7.00 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் அதி நவீன மயப்படுத்தப்பட்டு புதுப் பொலிவுடன்



"சத்தியா ஜீவல்லர்ஸ்" என்னும் புதிய ஸ்தாபனம் ஒரே கூரையின் கீழ் மங்களகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.
எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களையும் அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

எதிர்வரும் 10.05 2024 அக்ஷய திருதியையை முன்னிட்டு எம்மிடம் கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கிறோம்.

இணை நிறுவனங்கள்

NSR JEWELLERY | சிறிநதியா நகைமாளிகை | சத்தியா ஜீவல்லர்ஸ்

T.P: 021 221 1332, 077 236 7416

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதக மாகும் பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும், அத னால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.சகோ தர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண்செலவுகள் ஏற்படும்.தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இலாபம் கிடைக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம் பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் கூடுதலாக கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். விற்பனை குறைவாகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லை கள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத் தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர் பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்ற வர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகவே இருக்கும்.

**கும்பம்:** செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொறுமை அவசியம். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்ப டக்கூடும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. உணவு விடயத்தில் கவனம் தேவை.

## உதவித்திட்டத்துக்கு விண்ணப்பிக்குக!

யாழ்ப்பாணம், மே 3

தேசிய செயலகத்தின் ஊடாக, 60 வயது பூர்த்தியடைந்த முதியோர்களில் மாதாந்த குடும்ப வருமானம் 6 ஆயிரத்துக்கும் குறைவாகப் பெறும் சிரேஷ்ட பிரஜைக ளுக்கு கண் வில்லை, மூக்குக் கண்ணாடி, செவிப்பறை உபகரணம் என்பவற்றை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் மேற்கூறப்பட்ட தேவைப்பாடு உடைய பொருத்தமான சிரேஷ்ட பிரஜைகளைப் பிரதேச செய லக சமூக சேவைகள் கிளை யுடன் தொடர்பு கொள்ளுமாறு கோப்பாய்ப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அறிவுறுத்தி யுள்ளார். (ம-66)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 3

வடமாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு இரண்டு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

ஓய்வுநிலை நூலகர் கணேச ஐயர் சௌந்தர ராஜன் எழுதிய 'யாழ்ப்பாணத் தமிழியல் ஆய் வடங்கல்', மற்றும் மூத்த ஊடகவியலாளர் நவரத்தினம் பரமேஸ்வரன் எழுதிய 'யாழ்ப்பா ணக் கச்சேரியின் வரலாறு' ஆகிய இரு நூல் களுமே இவ்வாறு வெளியிடப்படவுள்ளன.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ...

நிறுவனம் தெரிவித்துள்ளது. நடைமுறையில் 4 ஆயிரத்து 115 ரூபாவாகக் காணப்படும் 12.5 கிலோகிராம் நிறைகொண்ட எரிவாயு கொள்கலன்களின் விலையை 4 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக நிர்ணயிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## ஒட்டுக்குழுவால்...

தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் கருத்துரை வழங்கினார்.

2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி உதயன் பணிமனைக்குள் புகுந்த ஒட்டுக்குழுவைச் சேர்ந்த ஆயுததாரிகள் சகட்டுமேனிக்கு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி உதயன் பணிமனையில் பொருட்சேதங்களையும், உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். விற்பனை முகாமையாளர் ஜோர்ஜ் சகாயதாஸ் மற்றும் விநியோகப் பணியாளர் ரஞ்சித்குமார் இருவரையும் சுட்டுக்கொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## எலும்புக்...

நாணயங்கள், துணி, அரிசித் துகள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் அரசினர் மருத்துவமனையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், ஆலயச் சூழலில் கிடங்கொன்றை வெட்டியபோது மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன. இதனையடுத்தே அங்கு அகழ்வுப்பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் நளினி சுபாகரன், சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன், தொல்லியல்துறை அதிகாரி மணிமாறன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், பொலிஸார், தடயவியல் பொலிஸார் முன்னிலை யில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அகழ்வின்போது பெண்ணொருவரினுடையதாகக் கருதப்படும் எலும்புக் கூடு முழுமையாக மீட்கப்பட்டது. எலும்புக் கூட்டுடன் செப்பு நாணயங்கள், துணி , அரிசித் துகள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி முன்னைய காலத்தில் மயானமாக இருந்திருக்கலாம் என்றும் பெண்ணின் உடல் இந்து முறைப்படி கிரியை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடு மற்றும் ஏனைய சான்றுப் பொருள்களைப் பார்வையிட்ட நீதிவான் இது தொடர்பான பகுப்பாய்வுப் பரிசோதனையை நடத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்க சட்ட மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்ததுடன் மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடு மற்றும் சான்றுப் பொருள்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ- 26-125-66)

## பல்கலைக்...

ஆணைக்குழுவும், அரசாங்கமும் இதுவரை தீர்வை வழங்காமையால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடித் தீர்வை வேண்டியும் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியாப் பல்கலைக்கழகத்திலும் நேற்று நண்பகல் முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடிய ஊழியர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதே போன்று வவுனியாப் பல்கலைக்கழகத்திலும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. (அ-ஒ-66-110)

## குருதிக்...

3 பிள்ளைகளின் தந்தையான லோகநாதன் (வயது- 47) மற்றும் அவரது மனைவியான லோக நாதன் பரமேஷ்வரி (வயது-37) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். இருவரும் முரண்பாடு காரணமாக சில மாதங்கள் பிரிந்திருந்ததாக ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கணவனின் தலையில் குருதிக்காயம் இருக்கும் நி[illegible]யில் இது கொலையாக இருக்கலாம் என்று நெடுங்கேணி[illegible]ார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஒ-110)

# குறுக்குவழியில் பதவிக்கு வருவதற்கு விரும்பவில்லையாம்

## சொல்கிறார் சஜித்

பிரதமர் பதவியை ஏற்குமாறு என்னிடம் 70 தடவைகள் கோரிக்கை விடுத்தார்கள். ஆனால் நான் ஏற்றுக்கொள்ளவில்லை என எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

'2018ஆம் ஆண்டு அரசமைப்பு சபை உருவாகுவதற்கு முன்னர் பத்துத் தடவைகளும் அரசமைப்பு சபை உருவாக்கப்பட்ட பின்னர் 61 தடவைகளும் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு என்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் நான் நிராகரித்து விட்டேன். குறுக்குவழியில் பதவிக்கு வர விரும்பவில்லை. மக்கள் ஆணையுடனேயே பதவியேற்க விரும்புகிறேன்' - என்றார். (ஒ-6)

# பாரவூர்தி - மோ.சைக்கிள் விபத்து; பொலிஸ் அலுவலர் காயம்

இறம்பைக்குளத்தில் இடம்பெற்ற பாரவூர்தி - மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் அலுவலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரவூர்தியுடன் பொலிஸ் உத்தியோகத்தர் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அலுவலர் காயமடைந்துள்ளார். (ஒ-18)

# ஐஸுடன் கைது

வவுனியா, மே 3

உக்குளாங்குளத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் திடீர்ச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தபோது, 50 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 15 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-18-110)


# INVITATION FOR BID (2024/01)
# DISTRICT GENERAL HOSPITAL KILINOCHCHI.

1. **The Chairman, Regional Procurement Committee, District General Hospital, Kilinochchi** on behalf of the Director District General Hospital, Kilinochchi, invites sealed bids from eligible and qualified bidders for the Construction/Renovation/rehabilitation/refurbishment/ Renovation work described in the table below.

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).** "Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the **Schedule (Section 5).**

5. Interested bidders may obtain further information from address given below in 6, and inspect the bidding documents at the same place on any working days from9.00 A.M to 4.00 P.M.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address given below **From 03.05.2024 until 16.05.2024 from 9.00 A.M to 3.00 P.M** upon payment of non-refundable fees as given in below table. The method of payment should be by cash.**District General Hospital, A9 Road, Kilinochchi. (T.P: 0212285329, 0212284111, Fax: 0212285327)**

7. Bids (Original and Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, District General Hospital Kilinochchi, A9 Road Kilinochchi on or before11.30 A.M on 17.05.2024.** Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, District General Hospital Kilinochchi, A9 Road Kilinochchi** commencing at **10.00 A.M on 10.05.2024.**

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table below.

| Document Issuing/Purchasing Period | | 03.05.2024 – 16.05.2024 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Pre-Bid Conference | | 10.05.2024 | | | | | |
| Closing and Opening of Bids | | 17.05.2024 | | | | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
| | | | | | Security Amount | Validity Period | |
| NP/DGH/KOC/2024/ PSDG(Conti)/W/03 | Renovation of Sewarage Cannel at DGH Kilinochchi | 3.35 | 60Days | C7 and ,C8 | 33,500.00 | Till 02.08.2024 | 1500.00 |
| NP/DGH/KOC/2024/ M/W/02 | Water supply system to Netharland Project at DGH Kilinochchi | 2.00 | 60 Days | C7,C8 and ,C9 | 20,000.00 | Till 02.08.2024 | 1500.00 |

**Chairman**
**Regional Procurement Committee**
**District General Hospital Kilinochchi**

(cr.42338) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீ-நோருக்கு...

இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளத்துடன் அமைச்சரவையும் இதற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்திய அரசாங்கம் 290 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. (அ-ஒ-6)

## எரிக்...

உதயன் பணிமனைக்குள் புகுந்து ஆயுததாரிகள் நடத்திய வெறியாட்டத்தின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று கடைப்பிடிக்கப்பட்டபோது அதில் அஞ்சலி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சொல்ஹெய்ம் சிலதினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்துவிட்டுப் போயிருக்கின்றார். நாம் எதற்காகப்பாடுபட்டோமோ, எங்களுக்காக பலர் எதற்காக பாடுபட்டார்களோ அவர்கள் எல்லாம் அழிவதற்குக் காரணகர்த்தா இந்த சொல்ஹெய்ம். இவ்வளவும் செய்துவிட்டு எங்கள்மண்ணுக்கு வந்துபோயிருக்கின்றார். தமிழர்கள் அரசியல் தீர்வாக என்ன எதிர்பார்க்கின்றார்கள். தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு என்ன பொருத்தமானது என்று எல்லாம் தெரிந்த அவர் இங்கு வந்து 13ஆம் திருத்தம்தான் தீர்வு என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றார். 13ஆவது திருத்தம் பற்றி இப்போது அவரிடம் யார் கேட்டார்கள்?

சொல்ஹெய்ம் ஒன்றை இனியாவது உணரவேண்டும். வெள்ளைத் தோல் உடம்பில் இருக்கலாம். இங்கு வந்து உங்கள் நாட்டாமையைக் காட்டக்கூடாது. அவர் ஒரு கோமாளி. அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக இப்போது இருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொஞ்சம் விடயம் தெரிந்த கோமாளிகளைத்தான் தன் பக்கத்தில் வைத்திருப்பவர். சொல்ஹெய்மை தமிழ் மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் வரவேற்கக்கூடாதஒருவர் - என்றார். (ஒ-5)

## இலங்கையின்...

அத்துடன், இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்க மக்கள் உத்தரலங்கா சபாகயவுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் அறைகூவல் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் என்றுமில்லாதவாறு பொருளாதார கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களை விற்பனைசெய்யும் நிலை காணப்படுகின்றது. இலங்கை மின்சார சபையை 12 கூறுகளாகப் பிரித்து இந்திய நிறுவனங்களுக்கு விற்பதற்குத் தயாராகின்றனர்.

இலங்கையையும், இந்தியாவையும் இணைப்பதற்குரிய பாதை பற்றியும் பேசப்படுகின்றது. விமான நிலையங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு வழங்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறியுள்ளார். இந்திய ரூபாவை இலங்கையில் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். அதேபோல இலங்கைமற்றும் இந்தியச்சுங்கங்களை இணைப்பதற்குரிய சாத்தியம் பற்றியும் பேசப்படுகின்றது.

இவ்வாறு இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இது நாட்டின் இறையாண்மையை காட்டிக்கொடுக்கும் செயலாகும். எட்கா உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் கோரப்பட்டாலும் அவை வழங்கப்படுவதில்லை. இரகசியமான முறையில் உள்ளடக்கங்கள் இடம்பெற்றுவருகின்றன - என்றார். (அ-ஒ-44)

## வழித்தட...

கடந்த 40 வருடங்களாக காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்கத்தின் உறுப்பினர்கள் பேருந்து உரிமம் மாற்றம் மேற்கொள்ளும்பொழுது சங்க உறுப்பினர்களுக்கிடையில் அறியப்படுத்தி வழித்தடத்தில் இருப்பவர்களுக்கிடையில் வழித்தட அனுமதி விற்கப்படுவது சங்கத்தின் வழமையாக இருந்து வந்துள்ளது.

ஆனால், உறுப்பினர் ஒருவர் வழித்தடத்தில் அல்லாத அராலியைச் சேர்ந்த ஒருவருக்கு வழித்தட அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்துள்ளார். இதுதொடர்பில் விற்பனை செய்வதற்கு முதலே வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு கடிதமூலம் அறியபடுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் ஆளுநருக்கும் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ஏற்கனவே காரைநகரில் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர் நேரடியாக காரைநகருக்கு வருகை தந்து சங்கத்துடன் எதுவித சந்திப்புகளையும் நடத்தாது பேருந்தை ஓட அனுமதியளித்துள்ளனர். இதனைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது.

ஆளுநர் சார்பில் வருகை தந்த அதிகாரியிடம் மனுவை போராட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர். இது குறித்து கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட தனியார் பஸ் சங்கங்களின் இணையத்தின் தலைவர் கெங்காதரன், காரைநகர் சிற்றூர் திச் சங்கம் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நடைமுறைக்கு வரும் முன்னரே செயற்படத் தொடங்கி விட்டது.

முன்னாள் வட[illegible] காண போக்கு[illegible] ரத்து அமைச்சர் பல்வேறு நியதிச்சட்டங்களை கொண்டு வந்தாலும் எமது சங்க நடைமுறையையும் ஏற்றே செயற்பட்டார். வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தொடர்பில் பல விடயங்களில் எமக்கு அதிருப்தி உள்ளது. இதற்குத் தீர்வை வழங்குவதாக ஆளுநர் அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். இது குறித்து தொடர்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாவட்ட ரீதியான நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டியிருக்கும் - என்றார். (அ-ஒ-125)

## மன்னாரில்...

பின்னர் குறிப்பிட்ட காலத்துக்குள் பல கோடி சொத்துகளை சேர்த்துள்ளார். அதன் அடிப்படையில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கல் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நீதிமன்ற அனுமதியைப் பெற்று தற்காலிகமாக 7 நாள்கள் சந்தேகநபரின் சின்னக்கடையில் காணப்படும் கடைத்தொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும் தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு, சொகுசு வாகனம் ஒன்றும் முடக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்துகளை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ-ஒ-இ)


# INVITATION FOR BID

## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50 Mn, Regional preference and CIDA grade preference shallapply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and as per the Public finance Circular No 04/2016 (iii) dated on 18.02.2021. This IFB is limited for the Bidders who have been required CIDA registration as mentioned below in the table and possess valid business or company registration within Northern Province.
4. Eligible bidders may obtain further information from **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachy Road, Cheddikulam.** (T.P No: 024-2260055 / 024-2260914, Fax: 024-2260913, E-mail - techvckps@gmail.com / cheddips@gmail.com) and inspect the bidding Documents at the same address on **03/05/2024 to 16/05/2024** from 9.00 hrs to 14.00 hrs.
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha Mannar-Madawachy Road, Cheddikulam from 03/05/2024 until 16/05/2024 from 9:00 hrs to 14:00 hrs upon payment of non-refundable fees of Rs. 3,000.00** for each bidding document. The method of payment should be by cash.
7. Bids shall be delivered with duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha** under Register post or bids shall be deposited in the "Tender Box" available in the **Vengalacheddikulam Pradeshiya Sabha** Office on or **before 14:00hrs** on**17/05/2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their authorized representatives are requested to be present. Please indicate the name of the **Construction work and Bid identification Number** should be written on top left hand corner of the envelop.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| S. No | Bid No | Details of Works | Estima-ted cost (Rs. Mn) | Contr - act period | Requir-ed grade | Bid validity Period | Required bid security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Security (Rs.) | Validity Period |
| 01 | NP/14/ 43 (6)/5/ 3-2 (01)/ 2024 | Construction of Metalling & Tarring at Mugaththan kulam 6th Lane NVVPE169 | 8.19 | 84 Days | C7 and C6 highway | 77 Days (02.08.2024) | 82,000.00 | 30.08.2024 |
| 02 | NP/14/ 43 (6)/5/ 3M-Plan (01)/ 2024 | Renovation of Mugaththan kulam 5th Lane, Renovation of Veerapuram 4th Lane, Renovation of Veerapuram 1st Lane | 4.23 | 84 Days | C8 and C7 highway | 63 Days (19.07.2024) | 43,000.00 | 16.08.2024 |

9. Pre Bid meeting will be held at Vengalacheddikulam Pradeshiya Sabha Cenferance hall at 10:30 hrs on **10.05.2024**

Chairman,
Local Authority Procurement Committee,
Vengalacheddikulam Pradeshiya Sabha.
03.05.2024

(CR 42342) A-1.tif


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில்**
**31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **25 இலட்சம்** மட்டும்.
- தரகர் தேவையில்லை.

(CS/375) J-1

தொடர்பு :- **077 886 2927**


# புதிய ஆளுநர்கள் இருவர் நியமனம்

தென் மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளு நர்கள் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர். தென் மாகாண ஆளுநராக லக்ஷமன் யாப்பா அபேவர்த் தனவும், வடமேல் மாகாண ஆளுநராக நஸீர் அஹமட்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். (ச)

# பெரமுனவின் எம்.பி. ஐ.தே.க.வில் இணைவு

பொதுஜன பெரமுனவின் மொன ராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கயாஷான் நவனந்த ஐக்கிய தேசியக் கட்சி யில் இணைந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார தலைமையி லான ஜனநாயக இடதுசாரி முன் னணி உறுப்பினரான இவர், கடந்த பொதுத்தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டி யிட்டு வெற்றிபெற்றார்.

அதன்பின்னர் விமல் தரப்புடன் உறவு இருந்தாலும், ரணில் விக்கி ரமசிங்க ஜனாதிபதியான பின்னர் ஆளுங்கட்சிக்குச் சார்பாகச் செயற்பட்டார்.

இந்த நிலையிலேயே பெருந்திர ளான ஆதரவாளர்களோடு நேற்று ஐ.தே.கவின் மே தினக் கூட்டத் தில் பங்கேற்று அந்தக் கட்சி யுடன் இணைந்துள்ளார். (ம-44)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 05.04.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சிவசாமி கிருபாகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் " வேலணை சாட்டி வெள்ளை கடற்கரை அந்தியேட்டி மண்டபத்திலும்". சபிண்டீக ரண கிரியைகள் நாளை (04.05.2024) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் "அன்னா ரது இல்லத்திலும்" நடைபெற்று ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடை- பெறும் மதியபோசனமும் "A1 ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்திலும்" (37. சேர் பொன் இராமநா தன் வீதி) நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

147/4, Temple Road,
Jaffna.

(CS/54904) J-1

குடும்பத்தினர்

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை "ஸ்கந்தா" பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS/54908) J-1

**077 391 3859, 077 729 9212**

## வேலையாட்கள் தேவை

**Garments** (காமென்ட்ஸ்) வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை. முன்னனுபவம் உள்ள மற்றும் மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**074 140 2929**

## காணி விற்பனைக்கு உண்டு

நல்லூர் பின்வீதி துர்க்கா மணி மண்டபத்தின் அருகில் செல்லும் பாதையூடாக அமைந்துள்ள **4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.** மேலும் மூத்ததம்பிமடம் அருகிலுள்ள பாதையினூடாகவும் செல்லமுடியும்.

(CS/54890) J-1

**077 229 4985, 077 621 2039**

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி **(Show Money)** வசதிகள்

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 03.04.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் மாதர் மகாலிங்கம்

**திதி வெண்பா**

**மண் மகிழ** 02.06.1944 — **கண் நெகிழ** 03.04.2024

நிகழ்ந்த சோபகிருதி யாண்டமிர் தசித்தத் திதியதனில்
திகழ்ந்த நற்பெயர் திசைபல மேவும் புகழ்மிகு
மாதர் மைந்தன் மகாலிங்கப்பெரியோன்
நாதனடியினை யணைந்தார்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெ றும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், நாளை (04.05.2024) சனிக்கிழமை **செல்வ மஹால் மண்டபத்தில்** (இல. 1229, கே.கே.எஸ். வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்) நடைபெறும் மதியபோசன நிகழ்வி லும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழம் றோட்,
ஆனைக்கோட்டை.

(CS/381) J-1

குடும்பத்தினர்
077 691 3133




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.